முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1171

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.12.2022, செவ்வாய்கிழமை

1. அரங்கனாய் கலியினில் அவதாரம் நிகழ்த்தி
ஆறுமுகன் என் அதி சூட்சுமமாக வாழும்
வரங்கள் பெற்ற ஞான தேசிகனே
வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 27 ம் நாள் 13.12.2022, செவ்வாய்கிழமை)
இனிமைபட உன் மார்க்கம்தான் இந்த உலகை
இக்கட்டிலிருந்து மீட்டு காத்தருளும்
3. அருளும் அரங்கன் உன் அகத்தியர் சன்மார்க்க சங்கமே
ஆற்றல் கூடும் அரங்கன் உன் தொண்டர் படைகள் மூலமே
இருளும் விலகி இந்த உலகில் ஞான ஒளி
எல்லாம் அரங்கன் உன் உபதேசத்தால் நடந்தேறும்
4. நடந்தேறும் உன் தர்மத்தால் தான்
நாடெங்கிலும் உள்ள பசிப்பிணி அகலும்
இடராக உலகை சுற்றி இருக்கின்ற
இந்த கலியின் மாயைகளும் அகன்றோடும்
5. அகன்றோடும் ஆளுமை சக்திகள்கூட
அரங்கன் உன் மகா அரசியல் ஆன்மீக பலத்தாலே
ஜெகமெங்கும் ஞானவான்கள் தலைமை அனுகி
செப்பிடுவேன் ஞான ஆட்சிக்காலமும் உதயமாகும்
6. உதயத்துக்கு ஓங்காரன் உந்தன் வழி
உயர்வாக மகா சக்திகள் வழங்கிவர
பதவிசுகம் என அதன்வழி
படுபாதகம் புரிகின்ற அன்பர்களெல்லாம்
7. அவர்களெல்லாம் இனி வரும் காலம் தன்னில்
அரங்கன் உன்பால் சரணடைவு கொண்டு
வகைபட உலகை காக்கும் சக்தியாக
வரங்கள் பெற்று மாறுதல் காணக்கூடும்
8. கூடுகின்ற இந்த அற்புதத்தை
குறைவின்றி ஆறுமுகன் நாடெங்கிலும்
ஈடேற்றுவேன் அரங்கன் உன் சக்தியாக
இந்த மாற்றத்தை உன் தொண்டர்கள் வழியாக சேவையாக
9. ஆகவே மாதர்மமாக அருளுவேன்
சன்மார்க்க உண்மை நெறியுமாக
வகைபட வழிநடத்தி நிற்பேன்
வையகத்தை காத்து வழி நடத்துவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—